**புதிய நிதியிடல் மாதிரியின் கீழ் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் மலேரியா கூறு - 2016**

புதிய நிதியிடல் மாதிரியின் கீழ் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய (ஜீஎவ்ஏரீஎம்) செயற்திட்டத்தின் மலேரியா கூறின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 898-எல்கேஏ-எம்-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்கு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள ஒதுக்கப்பட்ட மக்களிற்கிடையில் மலேரியாவின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் புதிய நிதியிடல் மாதிரிக்கான மலேரியாவின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதற்காக ரூபா 921.28 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 7.05 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையையும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகளிலுள்ள தகவல்களுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 3.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 181.66 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.21 மில்லியன் தொகையாகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வகுதி | 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | |
|---|---|---|
| | **ஐ.அ.டொலர்** | **ரூபா** |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 220,794 | 33,920,523 |
| மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 991,446 | 147,745,226 |
| | **1,212,240** | **181,665,749** |

### 3.2 காசுப்பாய்ச்சல் கூற்று

2016 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | **ஐ.அ.டொலர்** | **ரூபா** |
| வெளிநாட்டு உதவி – மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 886,875 | 132,162,099 |
| உள்நாட்டு நிதியங்களுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு உதவிகள் | 15,359 | 2,288,839 |
| கேள்வி வருமானத்திலிருந்து பெறப்பட்ட காசு | 54 | 8,000 |
| செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (991,446) | (147,745,226) |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | (89,158) | (13,286,288) |
| பெறுமானத்தேய்வு | 270,121 | 40,253,371 |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 492,429 | 75,651,863 |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு | (434,086) | (66,688,699) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | (7,474) | (1,113,732) |
| பரிமாற்ற வேறுபாடு | (5,026) | - |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை | (6,012) | (895,992) |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு** | **220,794** | **33,920,523** |

**முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்**

| | | |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | (220,794) | (33,920,523) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | (220,794) | (33,920,523) |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ தேறிய குறைவு | இல்லை | இல்லை |
| 2016 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |
| 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **மூலம்** | **மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள்** | | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஜீஎவ்ஏரீஎம் | 7.05 | 921.28 | 0.89 | 132.16 | 0.81 | 120.65 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 0.03 | 4.00 | 0.03 | 4.00 |
| | **7.05** | **921.28** | **0.92** | **136.16** | **0.84** | **124.65** |

### 4.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், இலங்கையானது முன்னைய ஆண்டில் மலேரியா அற்ற நாடொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நாட்டினுள் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் பின்னர் குடிபெயர்ந்த 28 இலங்கையர்கள் மற்றும் 13 வெளிநாட்டு வருகையாளர்கள் உள்ளடங்கலாக 41 மலேரியா நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். ஆகையால், வெளிநாட்டுப் பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டு வருகையாளர்களிற்கான நோய்ப் பாதிப்பு ஆய்வு (Screening) வசதிகளை வழங்குதல், உயர் ஆபத்து சமுதாயங்களிற்கான நடமாடும் சிகிச்சை நிலையங்கள் மற்றும் பூச்சியியல் கண்காணிப்புப் பரிசோதனைகள் (entomological surveillance tests) மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் நோய் பரவும் ஆபத்தை குறைப்பதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நோய்களைக் கண்டறியும் ஆய்வுகூடங்களை மீளமைத்துப் புதுப்பித்தல், பிராந்திய நிலையங்களின் வசதிகளை தரமுயர்த்துதல், பூச்சியியல் கண்காணிப்பு முறைமைக்காக கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் கள உபகரணங்களின் கொள்வனவு போன்ற நோக்கங்களிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 96.72 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் பெறுகை செயன்முறையை பிரயோகிப்பதிலுள்ள

தாமதங்கள் மற்றும் அவற்றின் மீது தேவையான அங்கீகாரங்களை பெறுவதிலுள்ள தாமதங்கள் போன்றவற்றினால் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழக்கமான அம்சமொன்றாக, செயற்திட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக உத்தியோகத்தர்களின் பங்குபற்றல் குறைவாக இருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட 05 பயிற்சிச் செயலமர்வுகளிற்காக 840 உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 530 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, உரிய பயிற்சிச் செயலமர்வுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5.76 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் அவற்றிற்காக ரூபா 3.16 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.3 நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட உப கட்டுநிதிகள் மீதான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) ரூபா 457,575 கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகள் நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ரூபா 100,000 எல்லையை விஞ்சி 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன. 37 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்ட ரூபா 1.49 மில்லியன் கூட்டுத்தொகையான உபகட்டுநிதிகள் 14 நாட்கள் தொடக்கம் 09 மாதங்கள் வரையான காலவீச்சுத் தாமதங்களுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், 19 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 632,275 கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 03 நாட்கள் தொடக்கம் 226 நாட்கள் வரையான வீச்சிலான தாமதங்களுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) செயல்நிமித்தக் கட்டுநிதிகள் குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முன்னரான திகதியில் உடனடியாக வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 09 சந்தர்ப்பங்களில் ரூபா 628,900 கூட்டுத்தொகையான உபகட்டுநிதிகள் கொடுக்க வேண்டிய திகதிக்கு முன்னர் 25 நாட்கள் தொடக்கம் 80 நாட்கள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய நிதியளிப்பு மாதிரியின் கீழ் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 243.35 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.58 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பௌதீக மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

செயற்திட்டத்தின் சுமூகமான தொழிற்பாட்டை உயர்ந்தளவு பாதிக்கின்ற 02 நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 21 மலேரியா உதவியாளர்கள் மற்றும் 09 நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் உதவியாளர்கள் (Vector Control Assistants) உள்ளடங்கலாக பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2017 யூன் 14 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.